The Industrial Labour Welfare Association Ltd.,

COIMBATORE.

Welcome Speech by

ROTARIAN PAST PRESIDENT

Dr. R. SUBRAMANIAM, T.D.D.,

Palayamkottai,

Speech by

Sri G. D. NAIDU,

and

Vote of thanks by

Rtn. A. L. MISSIER,

Secretary, Rotary Club, Tirunelveli,

at

MEETING OF THE TIRUNELVELI ROTARY CLUB,

PALAYAMKOTTAI

on **2—7—'62.**

The Industrial Labour Welfare Association Ltd.,

COIMBATORE.

Welcome Speech by

ROTARIAN PAST PRESIDENT

Dr. R. SUBRAMANIAM, T.D.D.,

Palayamkottai,

Speech by

Sri G. D. NAIDU,

and

Vote of thanks by

Rtn. A. L. MISSIER,

Secretary, Rotary Club, Tirunelveli,

at

MEETING OF THE TIRUNELVELI ROTARY CLUB,

PALAYAMKOTTAI

on **2—7—'62.**

Meeting of the Tiruneveli Rotary Club at Palayamkottai on 2—7—62

Speech by

Rotarian Past President

Dr. R. Subramaniam, T. D. D.,

Palayamkottai.

Rotarian Past President Mr. G. D. Naidu, Fellow Rotarians and Friends,

I am not trying to introduce Rotarian G. D. Naidu to you. We all have heard of him but many of us have not seen him or met him. The presence of such a large gathering this evening shows how we all wish to see him and hear him. He is an industrialist with revolutionary ideas. (laughter). He wants to take industry to the poor man's house and see that the poor man is benefitted by industry.

As far as Rotary is concerned, he has been a rotarian for nearly 20 years. As Thomas P. Harris was the founder of Rotary International, Mr. G. D. Naidu is the founder of Rotary in Coimbatore (Here, Here, Cheers). He became the president of the Rotary Club at Coimbatore in 1950 and

when he became the president of the club, he did introduce a revolution in the club and if Coimbatore could boast of Governors, its past Governors, it is mainly due to the inspiring guidance of Rotarian Past President G. D. Naidu. Coimbatore Rotary Club from its inception has been meeting only in the place of Rotarian G. D. Naidu at Gopal Bagh which is known throughout the world. Except for a short period, all the meetings of the Rotary Club, including conferences and assemblies have been held only in his place and those of us who have been to Coimbatore should certainly remember the hospitality which we enjoyed whether Rotarian G. D. Naidu was there or was not there, whether he was away in Germany or somewhere. The tradition of hospitality has been maintained so far.

Gentlemen, I do not want to take much of your time. I now request Rotarian Past President G. D. Naidu to address. (Cheers)

Speech by

Mr. G. D. Naidu.

at the Tirunelveli Rotary Club Meeting
on 2—7—62.

First I want to put one question whether to speak in English or Tamil. (laughter). I feel a little shy to speak in English here, but I can speak in English in other Countries. But every one here is an expert in English and my English won't be so good and in Tamil also there are experts here (laughter). Then what is the subject you want me to speak about? If it is anything in Automobile Engineering I can give good lectures for a long time and it will be interesting also to those who know automobile. But here I do not know what subject I can give here. (Your experience in foreign tour). During my foreign tour, I spoke mostly about Agriculture, and Medicine. Now in Germany I am a doctor in medicine. Actually I do not know anything about medicines scientifically. I cannot even mention the names of the medicines. Accidentally I happened to know about two or three diseases and two or three medicines of Siddha system found only in this part of India. With that I have become a big doctor.

Then in agriculture also, accidentally by some blind work, I got some success. With that I have become a doctor in agriculture (laughter). If you want any one of these subjects, I can say some thing here but I do not know what useful purpose it will serve here if I tell that now.

I have got those fruits, pappaya and plantains from my garden. I suppose you have seen them. Shall I say how they came to be like this? (தமிழில் பேசுங்கள்)

தமிழா? தமிழில் பேசி ரொம்ப நாள் ஆகிவிட்டது. நான் தமிழ் படித்து நாற்பது ஐம்பது வருஷங்கள் ஆகிவிட்டன. தமிழ் படிக்கக் கூடாது, படித்ததையும் மறந்துவிடவேண்டும் என்றே 25 வருஷங்களாக மனதில் வைத்து, அதுவும் மறந்து போய் விட்டது. 1949-லோ அல்லது 48-லோ, மதருசில் தமிழர் கான்பரன்ஸ் (conference)-ல் 'Tamil makes half cracks and miserable misers' என்று ஒரு லெக்சர் கொடுத்திருக்கிறேன். (சிரிப்பு.) அது தான் தமிழில் கொடுத்த கடைசி லெக்சர். (சிரிப்பு.) படித்தத் தமிழை உபயோகப் படுத்திப் பேசிய பேச்சு அது ஒன்றுதான். அதற்குப் பிறகு தமிழைப்பற்றி, தமிழில் பேசவில்லை.

ஜோசியத்தைப் பற்றி சில சமயங்களில் பேசி இருக்கிறேன். சங்கீதத்தைப் பற்றி சில சமயங்களில் பேசி இருக்கிறேன். தமிழைப் பற்றிப் பேசினது அந்த தமிழர் மகாநாடு ஒன்றில்தான். அதுவும் சப்ஜெக்ட் இதுமாதிரிதான். "Tamil

makes half cracks and miserable misers" என்று தமிழர் மகாநாட்டில் சொல்லும்பொழுது எப்படி இருக்கும்? (சிரிப்பு.) அதற்கு முன்பு T. P. வேதாசலம், ரா. பி. சேதுப்பிள்ளை, பக்தவத்சலம், அண்ணாத்துரை இன்னும் இது மாதிரி நிபுணர்கள் எல்லோரும் பேசி இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் 15 நிமிஷம், 20 நிமிஷம், 30 நிமிஷம் பேசியிருக்கிறார்கள். கடைசியில் நான் போய் பேசினேன். அது இப்பொழுது அச்சில் கூட இருக்கிறது. ராமசாமி நாயக்கர் அந்த புத்தகத்தை 2 அணா என்றோ என்னவோ இன்னும் விற்றுக் கொண்டிருக்கிறார். என் அந்த மாதிரி பேசினேன் என்று வேண்டுமானால் சொல்லட்டுமா? (சிரிப்பு.) எதைப் பேசுவதற்கும் சரியாக வரமாட்டேன் என்கிறது. எல்லாரும் எல்லாவற்றிலும் expert களாக இருக்கிறீர்கள். அமெரிக்காவில் போய் லெக்சர்ஸ் கொடுத்தேன். அங்கே அவர்களுக்குத் தெரியாத சப்ஜெக்ட்டைக் கொடுத்தேன். அதாவது மெஸ்மரிசம், ஹிப்நாடிஸம், கிளர்வாயன்ஸ், பயர் வாக்கிங், ஹிந்து கல்யாணங்கள் இந்த மாதிரி சப்ஜெக்ட்கள். அவர்களுக்கு தெரியாதவைகளாக எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அதே மாதிரி ஜெர்மனியில் போய் சித்தா மருந்துகளைப் பற்றி லெக்சர்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது இங்கே எதைப் பற்றிக் கொடுப்பது? எதைக் கொடுத்தாலும் இங்கே எல்லோரும் எக்ஸ்பர்ட்களாக இருக்கிறார்கள். (சிரிப்பு.)

முதலில் சுருக்கமாக அக்ரிகல்ச்சர் எப்படி வந்தது என்று சொல்கின்றேன். ஆட்டோமோபைல் ஒன்று தவிர்த்து வேறு ஒன்றிலும், எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் 6 வார கோர்சில்,

Radio-வும் Automobile-லும் வைத்து அந்த 6 வார கோர்சில் ரேடியோவைப் பற்றியும் லெக்சர் கொடுத் திருக்கிறேன். ஆனால் முதலில் லெக்சர் ஆரம்பிப் பதற்கு முன்னதாக, இரண்டு மணி நேரம் படித்து, அதற்குப் பிறகு லெக்சர் கொடுக்கிறேன். லெக்சர் கொடுத்து, அந்த கோர்ஸ் முடிந்ததும், மறுநாளே அதை மறந்து விடுகிறேன். இந்த Automobile ஒன்று மாத்திரம் நல்ல experience இருக்கின்றது — வேறு யார் கொடுக்கிறதையும்விட நன்ருக கொடுக்கலாம். இந்த Agriculture-லே அமெரிக்கா வுக்குப் போகும் போது, இந்த பிஸ்டல் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் டெபாசிட் செய்து விட்டு அமெரிக்காவுக்குப் போனேன். போய்விட்டு 1½ வருஷம் கழித்து வந்து பார்க்கிறபோது, அது துருப்பிடித்திருந்தது. துருப்பிடித்ததை சுத்தம் செய்து சரியாக வேலே செய்கிறதா இல்லேயா என்று பார்க்கிறதற்காக, வாழை மரம் 6, 7 மரங்கள் இருக்கிறது — பங்களாவின் முன்னல் — அந்த மரத்திலே கொண்டு போய் குண்டு போட்டுப் பார்த்தேன். இப்படி மரம் இருக்கிறதென்ருல், அடியிலே — ஒவ்வொரு மரத்திற்கும் ஒவ்வொரு குண்டு போட்டேன். மரத்தை ஓட்டைப் பண்ணிக் கொண்டு குண்டு அந்தப் பக்கம் போய்விட்டது, அந்த ஒட்டைகளில் ஒன்றில் எருமைச்சாணி, ஒன்றில் பேட்ரிக்கு ஊற்றும் ஆசிட், இன்னென்றில் சால்ட் — அதாவது வெறும் உப்பு, இன்னென்றில், ரொட்டி, — ஒரு டீ பார்டியில், ரொட்டியும் இறைச்சி யும் வைத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். அதை ஒருவரும் சாப்பிடவில்லே. அதை எடுத்து ஒரு பேரலில் கொட்டி வைத்திருந்தார்கள், வெளியில் எடுத்துக்கொண்டு போகவில்லே. ஒருவாரமாயிற்று, அது நாற்றமெடுத்திருந்தது, — அதை ஒரு மரத்தி

லும் இன்னும் இது மாதிரி, அந்த 7 மரத்திற்கும், முன்பெல்லாம் Tuberculosis மருந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள் Gold preparation – Italy preparation ஒன்று – அது இப்பொழுது கொடுப்ப தில்லை, அது சும்மா இருந்தது. அதை எடுத்து ஒரு மரத்தில் விட்டு, களி மண் வைத்து இரண்டு பக்கத்திலும் அடைத்துவிட்டேன். இந்தப் பக்கத் திலும் அந்தப் பக்கத்திலும் வைத்து அடைத்து விட்டேன். ஒரு 10 நாட்களுக்குப் பிறகு பார்க்கும் போது 2 மரம் வாடிப் போய்விட்டது. இன்னொரு 2 மரம் மற்ற மரங்களைவிட ரொம்ப சீக்கிரமாக மேலே வந்தது. அதன் பிறகு இதில் ஏதோ இருக்கிறதென்று சொல்லி, தினம் அரை மணி நேரம் ஒரு மணி நேரம் வேலை செய்வது என்று செய்தேன். இன்னும் 50 வாழைமரம் வைத்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இன்ஜெக்ஷன் கொடுத்து – இது சும்மா ஊத்தினது இதிலே – இதற்குப் பிறகு இன்ஜெக்ஷனே கொடுப்பதற்காக மெஷினெல்லாம் செய்து அந்த மெஷின் மூலமாய் இன்ஜெக்ஷன் கொடுத்தேன். மெஷின் மூலியமாய் என்றால் பக்கத்தில் ஒரு மரம் இருந்தது என்றால், அந்த மரத்திலே Vacuum மெஷின் வைத்து, அதனுடைய சத்தை இழுத்து, இந்த வெளிக்காற்று படாதபடிக்கு இன்னொரு மரத்திலே Compressed air வைத்து, இந்த சத்தை அதில் பலவந்தத்தில் ஏற்றினேன். அதே மாதிரி ஆரஞ்சு பழத்திலே – ஆரஞ்சு செடியிலே – கச்ச நாரத்தன் காய் – ஊறு காய் போடும் காய் – அந்த மரத்தினுடைய சத்தை எடுத்து, சாதாரண ஆரஞ்சு மரத்திலே, ரொம்ப condensed ஆக வைத்து அதிலே ஏற்றி, ஆரஞ்சுப் பழத்தை ரொம்ப கசப்பாய் செய்தேன். கசப்பு என்றால் ஒருவராவது ஒரு சுளை கூட சாப்பிட

முடியாது. அதை இவருக்கு ஒரு சுளை, (சிரிப்பு) (உங்கள் கூட இருந்தது யாருங்கோ – கைவல்ய சாமியார்.) அவருக்கு ஒரு சுளை வைத்து, எனக்கும் ஒரு சுளை வைத்து நான் சாப்பிட்ட மாதிரி பாவனை செய்துவிட்டேன் (சிரிப்பு.) அவர்கள் இருவரும் வாயில் வைத்துக் கடித்தார்கள். கடித்ததும் அப்படியே துப்பினார்கள். அதன் பிறகு சாப்பாடு எடுத்து வைத்துப் பார்த்தார்கள், சாப்பாடும் சாப்பிட முடியவில்லை. அதன் பிறகு அவர்களுக்கு எதிரிலேயே இன்னொரு பழம் கொண்டுவந்து அதை அறுத்து, இவர்களுக்கு எதிரிலேயே சாறெடுத்து, ஒரு கிளாஸ் தண்ணீரில் ஒரு ஸ்பூன் சாறு விட்டு கலக்கிக் கொடுத்தேன். அவர்கள் குடிப்பதில்லை என்று சொல்லி விட்டார்கள். நான் எடுத்து பூராவும் குடித்த பின்னர் அவர்கள் சாப்பிட்டார்கள். அந்த பழரசம் ஒரு ஸ்பூனும், ஒரு டம்ளர் தண்ணீரும் சேர்ந்ததுதான் ஆரஞ்சு ஜூஸ். அதற்குச் சமமாக இருக்கிறது. பழமாய் எடுத்துச் சாப்பிட்டால் சாப்பிட முடியாது. அவ்வளவு கசப்பாய்விட்டது. ஒரு 3 வருஷத்திற்குப் பிறகு அதே மரத்தில் இனிப்பு செய்வதற்காக அதற்கு வேண்டியதெல்லாம் ஏற்றி அது இனிப்பாயிற்று. இனிப்பாகும்பொழுது பழம் சிறுத்துப்போயிற்று. உள்ளே விதை இல்லை. மேல் தோலிலிருந்தே பூராப்பழமும் அப்படியே கடித்துச் சாப்பிடலாம். ஆனால் ஒரு பழமாவது ஒருவர் பூரா சாப்பிட்டதை நான் பார்த்தது கிடையாது. பாதிப் பழமோ கால் வாசிப் பழமோ சாப்பிட்டுவிட்டு அதற்கு மேலே சாப்பிட முடியாது, அந்த மாதிரி ஆகிவிட்டது.

இந்தியாவிலே 53 வகை வாழை இருக்கிறது – அதிலே 17 வகை மிகவும் சுவையுடையது,

மற்றவைகளைவிட அதிக ருசியுள்ளது. அவற்றில் இப்பொழுது இங்கே நெ. 3 கொண்டு வந்துள்ளேன். அந்தப் பழம் அந்தக் கூடையில் இருந்தது. அதிலே நெம்பர் இரண்டிலிருந்து நெம்பர் ஒன்பது வரை இருக்கின்றன. நெம்பர் 9 என்றால் 9 வகை வாழை மரங்களை வைத்து ஒவ்வொன்றினுடைய சத்தையும் ஒரே மரத்தில் ஏற்றுவது. அந்த மாதிரி இந்த நெ. 3 பழம். தோலைப் பார்த்து ஒருவர் ஒரு பேர் சொல்லலாம், ஆனால் தோலை எடுத்துவிட்டு ஒவ்வொரு வருக்கும் ஒரு பழத்தைக் கொடுத்து இது என்ன பழம் என்று கேட்டால், அதே மாதிரி கேட்டிருக்கி கிறேன் ஒரு conference-க்கு இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் வந்தவர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பழத்தை வைத்து, பேப்பரும் பென்சிலும் கொடுத்து, இது என்ன பழம் என்று எழுதச் சொன்னேன். அப்படி எழுதின காகிதங்களை எடுத்து, அதைப் பார்த்து இவர் இன்ன ஊர், இவர் இன்ன ஊர் என்று சொன்னேன். அதாவது பூவன் என்று எழுதியிருப்பார்கள், அவர் மலையாளத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னேன். ரசதாளி என்று எழுதியிருப்பார்கள், அவர்கள் தஞ்சாவூர் அல்லது திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்தவர் என்று சொன்னேன். சிறுமலைப்பழம் என்று எழுதியவர்களை மதுரையைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னேன். சர்க்கரை கள்ளி என்று சொன்னவர் களை குண்டூர், நெல்லூரைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னேன். அமிர்தபாணி என்று சொன்னதை ஒரிஸ்சா என்று சொன்னேன். அதாவது அந்தந்த ஊரில் உள்ள ருசியான பழத்தின் பெயரைச் சொல்லு கிறார்கள். பழம் ஒரே பழம்தான். அந்த ஒரே பழத்தில் இந்த ஐந்தாறு ருசி இருக்கின்றது. அதைச் சாப்பிடுகிறவர்களுக்கு, அவர்கள் ஊரிலே

என்ன பழம் நன்ருக இருக்கிறதோ அந்தப் பழம் தான் அவர்களுக்கு தெரிகின்றது. அந்த மாதிரி அந்தப் பழம் ஆகியிருக்கிறது.

அதன்பிறகு இந்தப் பப்பாய்ப் பழம். பப்பாயா விலும் அதே மாதிரி ஒரே மரத்திலே வெள்ளிரிக்காய் மாதிரியும், மெலான் மாதிரியும், மாம்பழம் மாதிரியும், டொமேட்டோ மாதிரியும் ஒரே மரத்திலே வந்தது. சர் C. V. ராமன் அந்த மாதிரி வராது என்று சொன்னுர். ஆனல் பிறகு அவரே வந்து அதைப் பார்த்து எடுத்து என்னவோ எழுதியிருக்கிருர். போட்டோ கூட காரில் இருக்கிறது. பப்பாயாவும் அதே மாதிரி வந்தது.

அதன்பிறகு அக்ரிகல்ச்சரல் காலேஜியில் எப்படியோ என்னை ஒரு மெம்பராகப் போட்டு விட்டார்கள். வழக்கமாக என்னை மெம்பராகப் போடமாட்டார்கள், தவறுதலாகப் போட்டு விட்டார்கள். முதல் இன்ஸ்பெக்ஷனிலேயே போய் ஏதேதோ suggestion எல்லாம் எழுதி கடைசியில் "Unless this is done, this Agricultural College will be like a museum for some interested people" என்று எழுதினேன். அதனல் அவர்களுக்கு ரொம்ப எரிச்சல் வந்து விட்டது. 40, 50 வருஷங்களாக ஒருவரும் அந்த மாதிரி எழுதவில்லை. ஏதோ ட்ரான்ஸ்போர்ட்டோ, இன்டஸ்டிரியலோ வைத்து விட்டு வந்து, இந்த மாதிரி எழுதுகிருன் என்று சொல்லி அவர்களுக்கு ரொம்ப வயிற்றெறிச்சல் ஆகி விட்டது. எரிச்சல் ஆகி ஏதேதோ பேசியிருக்கிருர்கள். அவர்கள் என்ன பேசினுர்கள் என்று எல்லா தகவலும் எனக்கு வந்தது.

அதன்பிறகு 2 பருத்திச் செடி, சோளச்செடி கொண்டு வந்து வைத்து அதற்கு இன்செக்ஷன்ஸ் கொடுத்து, அது மிகவும் உயரமாக வளர்ந்தது. அதை Agricultural College காரருக்கு, "நீங்கள் இதை வந்து பாருங்கள். இது இந்த மாதிரி வந்திருக்கிறது எனக்கு ஒன்றும் தெரிய வில்லை" என்று எழுதினேன். அவர்கள் வந்து பார்த்து, அந்த விதைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் எதெதோ பண்ணிப் பார்த்தார்கள். அதற்கப்புறம் நிறைய வேலைகள் எல்லாம் நடந்தது. Agricultural minister-க்கும் எனக்கும் கடிதப் போக்குவரத்து நடந்தது. இன்னும் எனக்கும் வேறு யார் யாருக்கெல்லாமோ கடிதப் போக்கு வரத்து நடந்தது. ஆனால் வந்தவர்களுக் கெல்லோருக்கும் இந்த விதைகளைக் கொடுத்துக் கொண்டு இருந்தேன். இரண்டு வருஷம் கொடுத்துக் கொண்டு இருந்தேன். இரண்டு வருஷம் கொடுத்து அதைக் கொண்டு போய் ஒருவராவது உபயோகிக்கவே கிடையாது. எதோ கொடுக்கிறாரே என்று மரியாதைக்கு வாங்கிக்கொண்டு போகலாம் என்று வாங்கிக்கொண்டு போனார்களே ஒழிய ஒருவராவது அதை ஒன்றும் செய்யக் கிடையாது ஒருவர் வந்து உங்களுடைய interview வேணும் 10 மணிக்கு என்று கேட்டார். நான் 10 மணிக்கு ஒருவரையும் பார்க்கிறதில்லை. காலை ஏழேமுக்காலிலிருந்து எட்டு, பகல் 12 விருந்து $12\frac{1}{2}$, மாலை $6\frac{1}{2}$-லிருந்து 7 வரை. இரவு 12 மணிக்கு எந்நேரம் வேண்டும் என்றாலும் பார்க்கலாம் (சிரிப்பு.) இந்த ஆள் மத்தியானம் 10-மணிக்குக் கேட்கிறார். போனபிறகு, இரண்டாவது திரும்பி வரும்பொழுது அவர் தன்னுடைய பேப்பர்களை மாத்திரம் எடுத்துக் கட்டிக்கொண்டு போய்விட்டார். இந்தப் பொட்டணத்தை அங்கேயே விட்டுவிட்டுப் போய்

விட்டார். (சிரிப்பு.) அதன் பிறகு அந்த எரிச்சலில் ஒரு விளம்பரம் போட்டேன். "Grow more food" என்று போட்டு, என்னென்னவோ அதில் எழுதியிருக்கிறேன். இந்த மாதிரி பருத்தி விதையும் சோள விதையும் இருக்கிறது. இங்கிலீஷில் தான் போட்டேன். 2 அங்குல ஸ்டேபிள் கிடைக்கும், ஒரே சோளத்தில் 2 கதிர், 4 கதிர், 10 கதிர் இப்படிக் கிடைக்கிறது. இதை வேண்டியவர்கள் வந்து பார்த்து, ஒரு கொட்டைக்குப் 10 ரூபாய் கொடுத்து விட்டு எடுத்துக் கொண்டு போகலாம். Correspondence ஒன்றும் கிடையாது, நேரில் வந்துதான் எடுக்க வேண்டுமென்று advertisement போட்டேன். அப்புறம் வந்தார்கள். வருகிறபோது, கேட்டில் ஒரு புஸ்தகம் வைத்து எதற்காக உள்ளே வருகிறீர்கள் என்று எழுதச் சொன்னேன். முதல் வாரத்தில் ஒரு 70 பேர் வந்தார்கள். அந்த 70 பேரில், 20 பேரோ, 25 பேரோ இந்த ரோட்டரி கிளப் மெம்பர்கள். (சிரிப்பு.) இந்த ரோட்டரி கிளப் மெம்பர்கள் 5 வருஷங்களாக வருகிறார்கள். கேட்டில் நுழையும் போது முன்னால்தான் இந்த பருத்திச்செடி இருக்கிறது, 5 வருஷமாக இதைப் பார்க்கவில்லை. இந்த advertisement போட்ட பிறகு 20 பேர், 25 பேர் வருகிறார்கள். (சிரிப்பு.) பாக்கி இருப்பவர்கள், மங்களூரிலிருந்து, சாத்தூரிலிருந்து, விருதுநகரிலிருந்து. இந்த சாத்தூரிலிருந்து, எங்கெங்கிருந்தோ வெகு தூரத்திலிருந்து வருகிறார்கள். இதுபோக, கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டிலிருந்தும், டேராடூனிலிருந்தும், கல்கத்தாவிலிருந்தும் அதற்கு லெட்டர்களும் வருகிறது. அந்த லெட்டர்களிலே, நீங்கள் விதை அனுப்புங்கள், எத்தனை விதை முளைக்கிறதோ, அத்தனைக்கு 10 ரூபாய் கொடுத்து விடுகிறோம்" என்று கவர்ன்மெண்டிலேயே கேட்டார்கள்.

(நகைப்பு.) இங்கு நேராக வந்தவர்களுக்கு, "இன்னும் விதை காயவில்லை, இன்னும் ஒருவாரமாகும், போய் விட்டு, ஒருவாரத்திற்குப் பிறகு திரும்பி வாருங்கள். ஒரு வாரமாகும் விதை காய்வதற்கு" என்று திருப்பி அனுப்பினேன். திருப்பி அனுப்பிய பிறகு அவ்வளவு பேரும் திரும்பி வரவில்லை. ஒரு சில பேர் வந்து 10 ரூபாய் கட்டிவிட்டு ஒவ்வொரு விதை (சிரிப்பு) எடுத்துக்கொண்டுபோய் விதைப் போட்டு, "என் விதை முளைத்திருக்கிறது, என் செடி 2 அடி வளர்ந்திருக்கிறது, 4 அடி வளர்ந்திருக்கிறது, பூக்கிறது, காய் காய்க்கிறது" என்று லெட்டர் எழுதுகிறார்கள். சும்மா கொடுக்கும் பொழுது, 2 வருஷம் பூரா விதையும் கொடுத்திருக்கிறேன். யாரும் care பண்ணவே கிடையாது. (சிரிப்பு.)

இதற்கப்புறம், துவரையில் ஆரம்பித்தேன். துவரையும் அதே மாதிரி ஒரு செடி சாதாரணமாக நம் Madras State-ல் 8 அவுன்சு கொடுக்கிறது average ஆக. 6 அடி, 7 அடி வளருகிறது, இந்தச் செடி 65 அவுன்சு கொடுக்கிறது, மரம் மாதிரி இருக்கிறது. அந்த போட்டோவுங்கூட காரில் இருக்கிறது. அதில் 3 பேர், 4 பேர் அந்தத் துவரைச் செடிக்கடியில் நிற்கிறோம். இதெல்லாம் கவர்ன்மெண்டில் எடுத்துப் பாருங்கள் என்று சொன்னால், Agricultural Minister இந்த காலேஜுக்கு எழுதினார். அவர் வந்து கேட்டார். கேட்கிறபோது அதைக் கொடுக்கிறதுக்கு எனக்கு இஷ்டமில்லை. ஏனென்றால் முதலில் அவர்கள் அந்த மாதிரி பேசி இருக்கிறார்கள். கொடுப்பதற்கு இஷ்டமில்லை. எப்படியாவது கொடுத்தே தீரவேண்டுமென்கிறார்கள். நான் "முடியாது அது என்னுடன்தான் சாக வேண்டும்" என்று சொல்லி விட்டேன். இதை அப்படியே

எழுதினார்கள். பிறகு minister வந்து எதெதோ பார்த்தார்கள். Minister ஒரு guarantee கொடுத்தால், நான் சொல்லுவதை யெல்லாம் carry out பண்ணுகிறதாக யிருந்தால், ஒரு வருஷத்தில் நாம் இங்கிருந்து grains export பண்ணக் கூடிய நிலைமைக்கு கொண்டு வரலாம். அதற்கு நீங்கள் தயாரா" என்று கேட்டேன். தயார் என்று சொன்னார்.

அதற்கப்புறம் அப்பொழுதே, நான் என்னென்ன செய்திருக்கிறேனோ, இன்னொருவர் நெல்லில் செய்திருக்கிறார். அவரையும் கூட்டிக்கொண்டு வந்து அதையும் ரிக்கார்டு பண்ணி வைத்து இருக்கிறது. இன்றைக்கும் ரிக்கார்டு பண்ணினது அப்படியே வைத்திருக்கிறது. அந்த ரிக்கார்டிங்கிலே, என்னென்ன chemicals இதில் injection பண்ணினோம், என்னென்ன மாதிரி மெஷின் செய்தோம் என்றெல்லாம் போட்டிருக்கிறது, அதெல்லாம் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது இன்றைக்கு அது ஒன்றுதான் ரிக்கார்டு இருக்கிறது. என்னென்ன செய்தேன் என்று இப்பொழுது மறந்து போய் விட்டது. இப்பொழுது அது discontinue ஆகிவிட்டது. ஆனால் அந்த விதை அப்படியே கொடுக்கிறது இன்னும். 15 வருஷங்களுக்கு முன்பு இன்ஜெக்ஷன் கொடுத்தது, அந்த விதை இன்னும் அப்படியே கொடுத்துக் கொண்டிருக்கிறது. துவரை, பப்பாயா, பருத்தி, சோளம் போய்விட்டது. சோளம் நான் ஜெர்மனிக்குப் போய் இருந்த பொழுது, நான் ஒன்றரை வருஷம் இருந்து விட்டேன். நம்ம ஆட்கள் அந்த $1\frac{1}{2}$ வருஷத்திலே, புகையிலை, ராகி வைத்து, தண்ணீர் அதற்கே விட்டு இதை அப்படியே துலைத்து விட்டார்கள். ஆட்கள்

நிலம் சும்மா போகுதே என்று சோளத்தைப் போட்டார்கள். கிணற்றில் தண்ணீர் இல்லாமல் போகவும் இருக்கிற தண்ணீரை அந்த சோளத்திற்கு விட்டார்கள். இதுகளை எல்லாம் neglect பண்ணி விட்டார்கள். இந்த பப்பாயாகூட போகிற மாதிரி இருந்தது. அப்புறம் வந்ததும் கோபத்தில் tractor வைத்து பாக்கி எல்லா பயிரையும் உழுது விடச்சொன்னேன். (சிரிப்பு.) புகையிலையும், ராகியும் தான் வைத்திருந்தார்கள். எல்லாவற்றையும் போட்டு complete ஆக உழுது விட்டேன். அதிலிருந்து சும்மா கிடந்தாலும் கிடக்குமே தவிர வேறே ஒன்றும் செய்வதில்லை. (சிரிப்பு.) இது Agriculture அது இன்னும் அதே stage லேயே இருக்கிறது. இன்றைக்கும் யாரும் அதை அதிகமாக எடுத்துப் பார்க்கிறதில்லை. வேறே ஊர்களில் செய்கிறார்கள் இங்கே ஒருவரும் அதிகமாகப் பார்க்கிறதில்லை.

இனி மருந்து எப்படி என்றால் injection கொடுக்கிறதிலேயே இந்த பப்பாயாவிலேயே மேல் தோல் இருக்கிறதே, நாம் சாப்பிட்டுவிட்டு எறிகிறோமே, அந்தத் தோலில் ஒரு மருந்து செய்கிறேன். அதாவது, mild disorders of stomach, – acute pains அல்ல – சாதாரணமாக மத்தியானம் சாப்பிட்டு விட்டு வயிற்று வலி, அல்லது வயிறு பொருமுகிறது அல்லது வாந்தி எடுக்கிறது எதாவது ஒரு disorder ஆயிற்று என்றால் அதற்கு மருந்து இந்தத் தோலில். அந்த விதைகளில் வயிற்று வலிக்கு ஒரு மருந்து. அந்த இரண்டு மருந்தும் செய்திருக்கிறேன். அதுவும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் இப்பொழுது. ஆனால் அதில் செய்தது என்று யாரிடமும் சொல்வதில்லை. பெரிய பிரமாதமான மருந்து என்று சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.

(சிரிப்பு.) ஆக, அந்த இரண்டுக்கும் ஆகிறது. இதிலேயே அல்வா செய்தோம். அந்த அல்வாவும், இந்த பழமும், இந்த மருந்தும் சென்ற வருஷம் கோயமுத்தூர் Agricultual College-லே நடந்த fruit exhibition-க்கு அனுப்பினேன். அவர்கள் ஒரு திராக்ஷை செடி வைத்திருக்கிறார்கள். அதில் 800 குலை காய்த்திருக்கின்றன. அதையும் வைத்திருந் தார்கள். அதற்குத்தான் 1st prize கிடைக்கும் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். நான் இதிலேயே ஒரு அல்வா செய்திருந்தேன். இந்தப் பழத்தில் செய்த ஒரு அல்வாவும், இதில் செய்த 2 மருந்துகளும், இலையில் ஒரு டீ செய்திருந் தேன் – அந்த டீயும், இதை எல்லாம் கொண்டுபோய் வைத்திருந்தேன். Judge கள், எல்லாவற்றையும் வந்து பார்த்து விட்டு இதற்குக் கொடுத்தார்கள் ஒரு வெள்ளிக் கப்பும், சர்டிபிகேட்டும். அவர் களுடைய grapes க்கு ஒன்றுமே கொடுக்கவில்லை. College க்கு grapes 800 கொத்து வருவதென்றால் கஷ்டந்தான். நல்ல grapes தான் ரொம்ப ருசியாக வும் இருக்கிறது, 800 கொத்துகளும் இருக்கிறது. ஆனால் இது அடித்துக் கொண்டு வந்து விட்டது பிரைஸ். குருட்டுவாக்கில் இதைக் கொண்டு போனேன் இது அடித்துக் கொண்டு வந்தது. இதை இனி எங்கெங்கேயோ உபயோகிப்பேன். இந்த சர்டிபிக்கேட்டைக் கொண்டு போய் (சிரிப்பு.) வெளியில் எங்கெங்கேயோ உபயோகிப்பேன். இந்த injection முதலியவைகள் எல்லாம் ஏதோ சயண்டி பிக்காக படித்தோ, தெரிந்தோ, அதில் என்ன chemicals இருந்தது என்றோ செய்ததல்ல. அகஸ் மாத்தா அந்த குண்டு போகுதா இல்லையா என்று பார்க்கப் போனேன். அதிலிருந்து இதெல்லாம் ஆயிற்று. இதைக் கொண்டு போய் – சர் ஜான்

ரஸ்ஸல், லேடி ரஸ்ஸல் லண்டனிலே இங்கிலாந்திலே ருத்தான்ஸ்டெட் இன்ஸ்டிடியூட் என்று ஒரு agricultural research institute இருக்கிறது. அது தான் உலகத்திலேயே பெரிய ரிசர்ச் ஸ்டேஷன். உலகத்திலேயே யார் யார், எங்கெங்கே agricultural experts இருக்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் அங்கே போய் இரண்டு மாதம், மூன்று மாதம் வேலை செய்கிறார்கள். சும்மா free ஆகப் போய் வேலை செய்யலாம். அவர்கள் இரண்டு பேரும் வந்து இது என்ன, எப்படி இருக்கிறது என்று தோட்டத்தில் வந்து பார்க்கிறார்கள். இதை யெல்லாம் வந்து பார்க்கிற போது "அதெல்லாம் எனக்குத் தெரியாது எப்படியோ வந்தது" என்று சொல்லிவிட்டேன்.

அதே மாதிரி ராயல் ஹார்டிகல்சுரல் இன்ஸ்டிடியூடிலிருந்து, லண்டனிலிருந்து ஒருவரை அனுப்பினார்கள். இந்த விதை முதலானவைகளைக் கொண்டு போவதற்கு. நான் கொண்டு போய் அந்த 'க்யூ' கார்டனில் விதைகளைக் கொடுத்தேன். அந்த பொட்டலத்தை வாங்கி சும்மா வைத்து விட்டார்களே தவிர ஒன்றும் பார்க்கக்கிடையாது.

அதற்குப் பிறகு R. V. சுவாமிநாதன் கூட வந்திருந்தார். சுவாமிநாதன் இந்த போட்டோக்களையோ எதையோ எடுத்து, யாருக்கோ ஒரு farmer க்கு அனுப்பி அதற்குப் பிறகு அவர்கள் என்னை வரச் சொன்னார்கள். எதோ ஒரு நாள் தவிர்த்து பாக்கி நாள் எந்த நாள் வந்தாலும் சரி காலை 10 மணிக்கு மேல் மாலை 5 மணிக்குள் வரலாம் என்று எழுதினார்கள். நான் அதற்கு லெட்டர் எழுதினேன், அவர்கள் எழுதின லெட்டரில் செவ்வாய் கிழமை தவிர பாக்கி நாளில் 10 மணிக்கு

மேல் 5 மணிக்குள் வரலாம் என்று எழுதினார்கள். நான், "வருவதற்கு முன்பு engagement எங்கெங்கோ fix பண்ணி விட்டேன். அப்படி வேண்டுமென்றால் நீங்கள் டெலிபோன் பண்ணுங்கள். நான் காலை 5 மணியிலிருந்து 8 மணி வரையில் இங்கே இருப்பேன். அல்லது ராத்திரி 9 மணியிலிருந்து 2 மணி வரையில் இங்கே இருப்பேன்" என்று எழுதினேன். அதன் பிறகு ஒரு நாள் ராத்திரி 12 மணிக்கு மேல் வந்து என்னென்னவோ பண்ணினார்கள். நான் வர முடியாது என்று ஒரே அடியாக அடித்து விட்டேன். அதன் பிறகு இந்த போட்டோக்களை எல்லாம் பார்த்தார்கள். இந்த ருத்தான்ஸ்டெட் இன்ஸ்டி டியூட்டை ஆரம்பித்தவர் இருக்கிறாரே, அவர் வந்தார். அவர் வந்து போன பின்னிட்டு அந்த கவர்ன்மெண்டி லிருந்து ஒருவரை அனுப்பி வைத்து, இங்கிருக்கிற அந்த விதைகளையும், கொம்புகளையும் வெட்டி எடுத்து, அதற்கு ஒரு பெட்டி செய்து அதையெல் லாம் வைத்து பார்சலில் லண்டனுக்கு அனுப்பி விட்டுப் பிறகு அந்த ஆள் லண்டனுக்குப் போனார். போய்விட்டு அங்கிருந்து இன்னொருவர் வந்தார். Professor Ashby, Director of Agricultural Economics of Great Britain என்பவர் வந்து பார்த்தார். இங்கிருந்து அங்கே போன பிறகு நான் அக்ரிகல்சரல் டாக்டர் ஆகிவிட்டேன், ஏனென்றால், அந்த சர் ஜான் ரஸ்ஸல் என்னை டாக்டர் என்று சொல்லுகிறார். டாக்டர் என்று அந்த இன்ஸ்டி யூட்டுக்கு introduction கொடுக்கிறார். அவர்கள் என்னைக் கூப்பிட்டு அட்ரஸ் பண்ணச் சொல்லி அந்த இன்ஸ்டிடியூட்டுக்குச் சொல்லி, அந்த இன்ஸ்டி டியூட்டிலிருந்து எனக்கு லெட்டர் எழுதுகிறார்கள், "வந்து நீங்கள் அட்ரஸ் பண்ணுங்கள். எந்த நேரத்தில் வேண்டுமானாலும், எந்த சப்ஜெக்ட்

வேண்டுமானாலும் அட்ரஸ் பண்ணுங்கள்'' என்று எழுதுகிறார்கள். எனக்கு அக்ரிகல்சர் என்றாலே என்னவென்று தெரியாது. அங்கே அந்த Experts இருக்கிற இடத்திலே நான் போய் அட்ரெஸ் பண்ணினால் நம்ம டாக்டர் டைடில் என்ன ஆகிறது? (சிரிப்பு.) அது போய்விடும். இது எப்படி தப்பிக் கிறதுன்னு பார்த்து அதற்கு ஒரு பதில் எழுதினேன். வளவளா என்று எழுதினேன். "எனக்கு எங்கெங்கேயோ என்கேஜ்மெண்ட் இருக்கிறது. (சிரிப்பு.) அதனால் நான் வரமுடியாது. ஆனால் ஊருக்குப் போவதற்கு முன்னால் கட்டாயம் ஒரு தடவை வருகிறேன்'' என்று எழுதிவிட்டு ஒரு தடவை 5 மணிக்குப் போனேன். 5 மணிக்கு எல்லோரும் போய் விடுவார்கள். (சிரிப்பு.) 5 மணிக்குப் போனேன். போகிறபோது Dr. M. க்ளெய்ம் என்ற ஒரு கிழவி, ஒரு ஸ்திரி, அவள்தான் அந்த செக்ஷனைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். இவள் தான் அங்கு இருக்கிறாள். மற்றவர்கள் எல்லோரும் வெளியில் போயாயிற்று, வெளியில் போய்க்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இன்னும் கேட்டுக்கு வெளியில் போகவில்லை. நான் கேட்டில் உள்ளே நுழைந்து கொண்டிருக்கிறேன். இந்தக் கிழவி அங்கிருந்து பார்த்து விட்டு, எப்படியோ இது அவனாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லி, உடனே ஒரு ஆள் அனுப்பிப் போனவர்களை எல்லாம் திருப்பி கூப்பிட்டுக் கொண்டு வந்து விட்டார்கள். (சிரிப்பு.) கூப்பிட்டுக் கொண்டு வந்து அப்புறம் அந்த ஹாலைத் திறப்பதற்கு அந்த ஹால் ஆசாமி மாத்திரம் காரிலே வெளியில் போய் விட்டார். அந்த ஹாலைத் திறக்க முடியவில்லை. உடனே திரும்பி வந்த ஆள்களை எல்லாம் கூட்டிக்கொண்டு போய் ரெஸ்டாரண்ட் மேஜைகளை எல்லாம் எடுத்து

விட்டு நாற்காலிகளை மாத்திரம் போட்டு இங்கே லெக்சர் கொடு என்று பிடித்துக் கொண்டு விட்டாள். அப்புறம் தப்பிக்கிறதற்கே வழியில்லை. பிறகு சுருக்கமாகச் சொன்னேன். முதலிலேயே சொல்லி விட்டேன், "எனக்கு ஒன்றுமே தெரியாது. அசல் முட்டாள். (சிரிப்பு.) அகஸ்மாத்தாக எனக்கு வந்தது. அதிலே ஒரு விதத்திலே successful ஆக இருந்தது. அதை continue பண்ணிக்கொண்டு இருக்கிறேன்" என்று சொல்லி விட்டேன். சொன்ன பிறகு "நீ இங்கேயே வேலை செய்" என்று கேட்டார்கள். இங்கு வேலை செய்தால் இன்னும் இருக்கிற குட்டு பூராவும் போய் விடுமே என்று, (சிரிப்பு) "தமிழிலே B. Sc. அக்ரிகல்சர் பாஸ் செய்தவன் ஒருத்தன் இருந்தால், அவன் கூட இருந்தால் நான் செய்ய முடியும். நான் இங்கிலிஷ் எங்கேயும் ஸ்கூலில் போய் படித்ததில்லை. இந்தப் பதங்களை ஒன்றுந் தெரியாது. தமிழானால் கொஞ்சம் தெரியும். அதனால் தமிழிலே, இங்கிலிஷிலே அக்ரிகல்சர் பாஸ் செய்த ஸ்டூடண்ட் எங்கேயாவது இருந்தால் கூட்டிக் கொண்டு வந்து வையுங்கள். நான் செய்கிறேன், என்று சொன்னேன். அவர்களும் இங்கிலாந்து முழுவதும் தேடிப் பார்த்தார்கள் ஒருத்தன்கூட இல்லை. எல்லோரும் பெங்காலி, மகாராஷ்டிரா இந்த மாதிரிதான் இருக்கிறார்கள். பிறகு "ஒருவரும் கிடைக்கவில்லை" என்று லெட்டர் எழுதினார்கள். நானே ஊருக்குப் போகவேண்டும் என்றேன். அதிக நாள் இருந்தால் கிடைத்துப் போய்விட்டால் வம்பு என்று, "இன்ன தேதியில் போகிறேன், அதற்குள்ளாக வேண்டுமென்று சொன்னேன் அவர்கள் முடியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். இது அந்த அளவில் நிற்கிறேன். அங்கு டாக்டர் ஆகிவிட்டேன்.

அப்புறம் அமெரிக்காவிலும் டாக்டர் ஆகி விட்டேன். அது எப்படி என்றால் இதே மாதிரி ரோட்டரிக்ளப்பில்தான் அங்கும் டாக்டர் ஆனது. ரோட்டரிக்ளப்பில் இந்த மருந்துகள்தான் – இது தான் 2nd grape show. இதில்தான் ஓர் கப் வந்தது. Silver cup. College க்கு வரும் என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் எனக்கு வந்தது. இதற்குப் பிறகு ஜெர்மெனிக்குப் போய் அங்கும் இந்த பழத்தையும் பருத்தி விதையையும் கொடுத் தேன். பருத்தி விதை கொடுத்ததற்கு அவர்கள் வேறு ஒரு ஸ்டேண்டர்ட் விதையும், இந்த விதை யும், டியூபிங்கன் என்று ஜெர்மனியிலுள்ள ஒரு ரிசர்ச் ஸ்டேஷனில் வைத்து பரீக்ஷை செய்தார்கள். பரீக்ஷை செய்து இது நம்ம விதை, மற்றது சாதாரண விதை இரண்டையும் ஒரே சமயத்தில், ஒரே கண்டி ஷனில், ஒரே ரூமில் வைத்து பார்த்ததில் இது அதிக மாக வளர்ந்திருந்தது. இதற்கு நாயுடு காட்டன் என்று பெயர் வைத்தார்கள். இன்னைன்றுக்கு டுயூபிங்கன் காட்டன் என்று பெயர் வைத்து இது இரண்டிலுமுள்ள க்ரோமஸோம்ஸ் (chromozomes) களை எடுத்து இங்கு காட்டியிருக்கிறார்கள். இதில் க்ரோமசோம்ஸ் டபுள் ஆகியிருக்கிறது. ஜப்பானி லும், அமெரிக்காவிலும் 20 வருஷங்களாக ரிசர்ச் பண்ணி கெப்ரலின் (Gebralin) என்று ஒரு கெமிக் கல் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த கெமிக்கலைக் கொண்டு போய் இன்ஜெக்ஷன் பண்ணினால் செடி வேண்டுமானால் வளரும். ஆனால் ஒன்றும் ஈல்ட் (yield) இருக்காது அல்லது ஈல்ட் இருக்கும் செடி உயரமாக வளராது என்ன ஆகும் என்று அவர்களால் சொல்ல முடியாது. தவிர ஒவ்வொரு செடிக்கும் கொடுக்க வேண்டும், ஒவ்வொரு செடிக்கும் கொடுக்க வேண்டும் என்பது ஒன்று. என்ன ஆகும் என்பது

தெரியாது. அந்த மாதிரி கண்டு பிடித்திருக்கிறார்கள். இது அதே விதைகள் இன்னும் கொடுக்கின்றன. அதேமாதிரி 2 வது இன்ஜெக்ஷன் கிடையாது. ஒன்றும் கிடையாது. 15 வருஷங்களுக்கு முன்னால் கொடுத்த இன்ஜெக்ஷனிலே இன்னும் கொடுத்துக் கொண்டு வருகிறது. இதற்கும் அதற்கும் அந்த வித்தியாசம் இருக்கிறது.

எதனால் இந்த மாதிரி, இந்த விதை கொடுக்கிறது என்று இவர்கள்தான், இங்கே ஜெர்மெனியில் தான் கண்டு பிடித்தார்கள். கண்டு பிடித்து க்ரோமஸோம்ஷ் டபுள் ஆகியிருக்கிறது என்று கண்டுபிடித்தார்கள். அதற்கு முன் இங்கிலாந்தில் கொண்டு போய் ரிசர்ச் செய்து பார்த்தார்கள். அவர்களும் ஒன்றும் சொல்லவில்லை. இங்கே நம்ம காலேஜிலும் கொண்டு போய் ரிசர்ச் செய்து பார்த்தார்கள். அவர்களும் ஒன்றும் சொல்ல வில்லை. இது ஜெர்மெனியில் சொன்னார்கள். இது நமக்கு ஒரு நல்ல ஆதரவு ஆயிற்று என்று எடுத்து வைத்துக் கொண்டேன். இந்த போட்டோவும், இந்த க்ரோமசோம்ஸ் அதிகமாகியிருக்கிறது என்று bluff பண்ணுவதற்கு இது ஒரு ரிகார்டு.

இதைக் கொண்டு போய் அமெரிக்காவில் விட்டேன் அங்கே. (சிரிப்பு.) எதாவது ஒன்று கிடைத்தால் அதை உபயோகப் படுத்தினேன், அவ்வளவுதான். மற்றபடி நான் ஒன்றிலும் எக்ஸ்பர்ட் அல்ல நீங்கள் சொல்லுகிறமாதிரி, நினைக்கிறமாதிரி, தினத்தந்தியில் எழுதுகிறான் பாருங்கள் அதிசய மனிதர் என்று. என்ன அதிசயம் இருக்கிறது? (சிரிப்பு.) ஒரு அதிசயம் இல்லை, ஒன்றுமில்லை. ஒரு bluff பண்ணுகிறதில் இவைகளை உபயோகப்

படுத்தினேன். ஒவ்வொரு இடத்திலேயும் உபயோகப் படுத்தினேன். ஜெர்மெனியிலே அந்த சோளத்தைப் பற்றிப் போட்டிருக்கிறுன். இது ஒரு ரிகார்டு, இதுதான் நான் எங்கேயாவது போகிறது என்றுல் எக்ஸ்சேன்ஞ் foreign போனுல் எக்ஸ்சேன்ஞ் வேண்டுமே, இங்கே ரிசர்வ் பேங்கில் ஒன்றும் கொடுக்கிறதில்லை. (சிரிப்பு.) அவர் இருக்கிறுர் அங்கே – அவர்தான் சாங்ஷன் பண்ணுகிறவர், எனக்கு 20 பவுன் கொடுக்கிறதில்லை என்று சொல்லி விட்டார். என் மகனுக்கு 5000/- ரூபாய் கொடுத்திருக்கிறுர் போனமாதம். எனக்கு 20 பவுன் கொடுக்கிறதில்லை என்று சொல்லி விட்டார். ஏன் என்றுல் ஸ்பெஷல் டிரீட்மெண்ட் என் பயில் மாத்திரம் – என் பயிலும் இன்னும் நாலைந்து பேருடைய பயிலும் மாத்திரம் டில்லிக்குப் போய் சாங்ஷன் ஆக வேண்டுமாம். பாக்கி எல்லாம் இவரே கொடுக்கலாம் இங்கே. என்னுடையது மாத்திரம் அங்கே போக வேண்டுமாம். அங்கே போனதில் 20 பவுன் கூட கொடுக்க முடியாது என்று வந்திருக்கிறது. அப்படியிருந்தும் போய் விட்டு வந்திருக்கிறேன். அப்படி அங்கெல்லாம் போய்விட்டு வருவதற்கு இதுதான் எனக்கு எக்ஸ்சேன்ஞ். இதையெல்லாம் வைத்துக் காட்டித்தான் எக்ஸ்சேன்ஞ் வாங்குகிறது. (சரி எவ்வளவு நேரம்? (சிரிப்பு.) டயம் ஆகிவிட்டது.) டயம் ஆகிவிட்டதல்லவா? இதோடு நிருத்தலாம் அல்லவா? (சிரிப்பு.) பதில் — இல்லை, இல்லை, கோயம்புத்தூருக்கு வந்தால் இவ்வளவு நேரம்தானு? ஸ்ரீ. நாயுடு பதில் — அது நேரம் எவ்வளவு என்று சொல்ல முடியாது. இதேமாதிரி போனுல் மணி 2, 3 கூட ஆனுலும் ஆகிவிடும். (பலத்த சிரிப்பு.) அதற்கு நீங்கள் தயாராக இருந்தால் நானும் தயார் தான். (தொடர்ந்து சிரிப்பு.) ஆனுல் அவ்வளவு

நேரம் ரோட்டரி க்ளப்பில் இருக்கக்கூடாது. எவ்வளவு நேரம் பேசலாம்? — 30 நிமிஷங்கள் பேசலாம் — இப்பொழுது எவ்வளவு ஆயிற்று? — 40 நிமிஷங்கள் ஆகிறது. — ஆமாம், 40 நிமிஷம் ஆயிற்று. ரூலைக்கடந்து போய்விட்டதே. இதோடு நிற்கலாமா? அல்லது இன்னும் நடக்கலாமா? (சிரிப்பு.) அல்லது இதோடு நிற்கலாமா? பிளேடைப் பற்றிச் சொல்லுங்கள். — பிளேடா? பிளேடுக்குப் பதில் மருந்தைச் சொல்லுகிறேன். இதேமாதிரி சுருக்கமாக.

இந்த இன்ஜெக்ஷனைக் கொண்டு போய் நம்ம ஊர் வேர்கள், மூலிகைகளுக்குக் கொடுத்துப் பார்த்தேன். அவைகளும் நன்ருக வளர்ந்தன. பிறகு ஒரு டாக்டர் ஒருவர் அகஸ்மாத்தாகக் கிடைத்தார். அதாவது டாக்டர் B. P. B. நாயுடு என்று ஒருவர் — 2, 3 வரி இருக்கும் அவருடைய டைடில்கள். — 25 வருஷங்கள் விவர் பூலில், மெடிகல் காலேஜில் லெக்சரராக இருந்திருக்கிருர். பிறகு ஹாப்கின்ஸ் இன்ஸ்டிடியூட்டில் 25 வருஷங்கள் இருந்திருக்கிருர். அவர்தான் முதலில் ப்ளேக், டைபாய்டுக்கு சீரம் கொண்டு வந்தது. அந்த ஆதர் இவர். 50 வருஷங்களுக்குப் பிறகு — பெங்களூர் அவருடைய சொந்த ஊர் — அங்கே வந்து இருந்தார். அங்கே உடம்புக்கு ஒத்துக் கொள்ள வில்லை. மதருசுக்குப் போனுர். அங்கேயும் உடம்புக்கு ஒத்துக் கொள்ள வில்லை. பிறகு கோயமுத்தூருக்கு வந்தார். இடம் கிடைக்க வில்லை. நான் ஹாஸ்டலில் ஒரு ரூம் கொடுத்து வைத்தேன். அதில் இருந்தார், அங்கே நன்ருக சாப்பாடும் ஒத்துக் கொண்டு விட்டது. க்லைமேட்டும் ஒத்துக் கொண்டு விட்டது. பிறகு அவர் நமக்குக் கிடைத்த மாதிரி தானே. அவரை வைத்து

இந்த மருந்துகளில் ரிசர்ச்சு ஆரம்பித்தேன். இதையெல்லாம் இன்ஜெக்ஷன் பண்ணி, அவைகளை டெவலப் பண்ணி, அவைகளிலிருந்து டயாபெடீஸ், லுகோரியா, ஆஸ்த்மா ஆகிய இந்த மூன்றுக்கும் மருந்துகள் செய்தோம். டயாபெடீசும், லுகோரி யாவும் ரொம்ப சக்ஸஸ்புல் ஆயிற்று. அந்த மருந்து களை எப்பொழுதும் ஜோபிலேயே போட்டுக் கொண்டு இருக்கிறேன். போட்டுக் கொண்டு நியூயார்க்கில் ரோட்டரி க்ளப்புக்குப் போனேன். அந்த ரோட் டரி க்ளப்புக்கு ஒரு டாக்டர் வந்திருந்தார். அவரு டைய விருந்தாளியாக இருந்தேன் — அவரிடம் கொடுத்தேன், அவர் அதில் ரிசர்ச் செய்தார். அந்த மருந்துகளுக்கு — அந்த மூன்றுக்கும் 20 ஆயிரம் டாலர் கொடுத்து அலாட்பண்ணி, அதிலிருந்துதான் ‘டயபினுஸ்’ என்ற மருந்து வந்திருக்கிறது. இப் பொழுது 2 வருஷமாக அது இந்தியாவில் இருக் கிறது. டயாபடீஸுக்கு டயபினுஸ் என்று வந்திருக் கிறது. அந்த டயாபினுஸுடன் — ஊரில் ஒரு கருவேலம் செடி இருந்தது அந்தக் கருவேலம் செடி நன்றாக வளர்ந்திருந்தது. கை கழுவுகிற தண்ணீர் எல்லாம் போய் நன்றாக வளர்ந்து, கருவேலஞ்செடி என்றே தெரியாதபடி வளர்ந்திருந்தது. அதை வெட்ட வேண்டி வந்து விட்டது. வெட்டுவதற்கே பிரியம் இல்லை. இருந்தாலும் வெட்ட வேண்டும் என்று வெட்டி அந்த தழை, பூ, பட்டை வேர், வேர்ப் பட்டை முதலிய எல்லாவற்றையும் எடுத்து காய வைத்துப் பொடி பண்ணி அதை ஒரு certain mixture போட்டு பாட்டிலில் வைத்து விட்டேன் அதையும் கொடுத்திருக்கிறேன். அதையும் கேட்கி றார்கள். இன்னும் கொஞ்சம் கொடு என்று கேட்கிறார்கள்.

பிறகு இன்னொரு தடவை இந்த மருந்துகளை யெல்லாம் கேட்டார்கள்.

Pfizer International என்று ஒரு பெரிய கம்பெனி. அந்தக் கம்பெனியிலிருந்து கேட்கிறார்கள் இதை யெல்லாம். கேட்டு போன வருஷம் நடுவிலே ஜெர்மெனியிலே இந்த மருந்தைக் கொடுத்து ரொம்ப நன்றாக ஆகிவிட்டது டயாபெடீஸ். பிறகு அந்த ஊரிலுள்ள நாலைந்து டாக்டர்கள் சேர்ந்து எனக்கு ஒரு டின்னர் கொடுத்தார்கள். அதற்கு மற்ற பெரிய டாக்டர்களை யெல்லாம் கூப்பிட்டிருந்தார்கள். பேயர், மெர்க், போரிங்கர் முதலியவர்களை எல்லாம் கூப்பிட்டிருந்தார்கள். அங்கே போய் என்னைப் பேசச் சொன்னார்கள். நான் பேசும்போது அதை மொழி பெயர்க்க வேறு ஒருவர் இருந்தார். நான் பேசும் பொழுது முதலிலேயே சொல்லிவிட்டேன், நான் டாக்டர் அல்ல மருந்தைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. வேறு ஒரு டாக்டர் இருந்து செய்து கொடுத்த மருந்துகள்தான். இல்லாவிட்டால் அந்த ஸ்டைலில் ஏதாவது கேள்விகள் கேட்டால் சொல்லத் தெரியாது. (சிரிப்பு.) அதற்காக அந்த மாதிரி சொல்லிவிட்டு — ஆனால் அவர்களுடைய ஊரில் டின்னர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய மருந்து மோசம் என்று சொல்ல வேண்டும், நம்முடைய மருந்து நல்லது என்று சொல்ல வேண்டும். அது எப்படி முடியும் அங்கே? வரவே மாட்டேன் என்றது. 27 டாக்டர்கள் இருக்கிறார்கள். அதைச் சொல்வதற்கே கூசுகிறது. ஆனால் சொல்லியே ஆகவேண்டுமென்று ஏதேதோ பேசுகிறேன், என்னென்னவோ பேசிவிட்டு, கடைசியில் ஒரு இடத்தில் வந்து சொன்னேன், "உங்கள் மருந்து ரொம்ப நல்ல மருந்து. நாடிஸான், ஆரினஸ்,

டால் பிடோ மைசின், பிஜட் 55, இந்த மருந்துகளைப் பற்றி ஒவ்வொன்றும் அமெரிக்காவில் up John கம்பெனி இவ்வளவு பேஷண்டுகளுக்குக் கொடுத்தார்கள், அதில் இவ்வளவு பேருக்கு side effect வந்திருக்கிறது லிவர் கெட்டுப் போய் விட்டது Heart attack வந்திருக்கிறது, இன்னொன்று 700 கேசுக்கு கொடுத்தார்கள் — 650 குணமாகி யிருக்கிறது, ஆனால் 50 கேஸ் இந்த மாதிரி side effect வந்து விட்டது என்று அவர்களுடைய மருந்து ஒவ்வொன்றையும், அதிகமான நல்லது செய்திருக்கிறது, சிலது கெட்டதும் செய்திருக்கிறது அதையும் கூட எல்லாம் சொல்லிவிட்டு உங்களுடைய மருந்துகள் எல்லாம் ஒரு boon தான் டயாபெடீஸ் பேஷண்டுகளுக்கு. ஆனால் இதைவிட complete ஆக cure பண்ண — உங்கள் மருந்துகள் Insulin-ஐ replace பண்ணுகிறது, ஆனால் complete cure பண்ணுவதில்லை. என்னுடைய மருந்து complete cure செய்கிறது. அதனால் அதைவிட இது நல்லது என்று சொல்லலாம் அல்லவா" இவ்வளவுதான் என்னுடைய மருந்தைப் பற்றிச் சொன்னது, அவ்வளவோடு சொல்லிவிட்டு பிறகு வேறு சமாச்சாரம் ஆரம்பித்துவிட்டேன். ஒன்றரை மணி நேரம் அந்த மாதிரி சொல்லிவிட்டு, அங்கே சொஸ்தமானவன் இருக்கிறானே அவனையும் அங்கே கூட்டிக்கொண்டு வந்து வைத்திருந்தேன். இன்னொருவன் heart disease என்று சொல்லி heart sanitorium-ல் 3 மாதம் இருந்து அங்கே நன்றாய் விட்டதென்று இங்கே வந்து ஒரு மாதத்தில் பின்னும் வந்துவிட்டது. அவனுக்கு heart attack அல்ல வேறு வியாதி, அது தெரியாமல் heart attack என்று அங்கே போய் இருந்திருக்கிறான். என்னிடம் வந்தான். நான் அதைப் பார்த்து, அது எதனால் வந்தது என்று பார்த்து அதை நீக்கி – மருந்தும்

கிடையாது, ஒன்றும் இல்லே, அது நன்ருகி விட்டது. அவனும் அங்கிருந்தான் பெயருக்கு டயாபெடீஸ் மருந்தைத்தான் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடச் சொல்லிக் கொடுத்திருந்தேன். ஏதாவது மருந்து கொடுக்கவேண்டுமே, அதற்காக டயாபெடீசுக்குக் கொடுக்கும் மருந்தையே கொடுத்தேன். (பலத்த சிரிப்பு.)

அதையும் சொல்கிறேன். அங்கே ரொம்பக் குளிர். ரொம்பக் குளிருக்கு ஜன்னலே யெல்லாம் மூடிவிடுவார்கள். கதவை மூடிவிடுவார்கள். ஒரு சின்ன அறை, அதில் கட்டில் போட்டுப் படுத்துக் கொள்ளலாம். அதனுடைய ஏரியாவைப் பார்த்தால் – ரொம்ப குள்ளமாக இருக்கும், 7, 8 அடிக்குள்ளே தான் இருக்கும் – இதில் ஏரியா பார்த்தால் ஒரு 10 கன அடி oxygen தான் இருக்கும். அவன் ராத்திரி சாப்பிடுவது மீட்டே இரண்டு பவுன்ட் அடிச்சுடுவான். மத்தியானத்திற்கு சாப்பிட்டாலும் பாதகமில்லே. இராத்திரிக்குத்தான் அதிகம் சாப்பிடு வான். இராத்திரிக்கு சாப்பிட்டுவிட்டு இங்கு வந்து படுத்தான் என்ருல், அந்த oxygen 1 or $1\frac{1}{2}$ மணி நேரத்திற்குத்தான் தாங்கும். அதற்கு மேலே கார்பன்டை ஆக்ஸைடு தான் யூஸ் பண்ணுவான். (சிரிப்பு.) அதை யூஸ் பண்ணும்போது இந்த மீட்டுக்கு ஒரு $2\frac{1}{2}$ மணி நேரம் 3 மணி நேரம் வேண்டும். $1\frac{1}{2}$ மணி நேரம் போக பாக்கி கார்பன்டை ஆக்ஸைடு, அது என்னுகிறது புளிக்க, புளிக்க கேஸ் ஆகி அந்த கேஸ் போய், oesophagus-ஐ தள்ளி ஹார்ட்டுக்கு பெயின் கொடுக்கிறது. அதை ஹார்ட் டிஸீஸ் என்று அங்கே போகிருன். அங்கே அதை சுகமாக்கிக்கொண்டு வந்தான். பின்னேயும் இங்கே வந்து இந்த ரூமிலேயிருந்து பின்னும் வந்துவிட்டது.

என்னிடம் வந்தான், நான் இதெல்லாம் குறைத்து மீட் சாப்பிடக் கூடாது மீட் காலமே அல்லது மத்தியானம் சாப்பிட வைத்து, இந்த ரூமில் ஜன்னல் ஒன்று போடச் சொல்லி, ஜன்னல் திறந்தேதான் இருக்க வேண்டும், கம்பளி வேண்டுமென்றால் இனியும் நாலு கம்பளி போர்த்திக்கொள், பூராவும் போர்த்திக்கொள், ஜன்னல் திறந்துதான் இருக்க வேண்டும் என்று செய்தேன், பிறகு சுகமாகி விட்டது. ஆனால் அவன் நினைத்தான், இந்த மருந்தில்தான் சுகமாயிற்றென்று. (சிரிப்பு.) சரி அந்த ஆளும் அங்கே இருக்கிறான். இந்த லெச்சர் கொடுக்கும் போது இந்த இரண்டு பேரும் அங்கே இருக்கிறார்கள். பாருங்கோ அவர்களைக் கேளுங்கள் என்று சொல்லிப் போட்டேன். இந்த லெச்சர் முடிந்தபிறகு அந்த இரண்டு பேரினுடைய டாக்டர்கள் இருக்கிறார்களே அவர்கள் போய் அந்த இரண்டு பேரையும் சூழ்ந்துகொண்டு, ஏது, என்ன, எப்படி சாப்பிட்டாய் என்ன செய்தாய் என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களைக் கேட்டு விட்டு கடைசியில் என்னுயிற்று, எங்கள் டாக்டர் ராமசாமி அய்யரும் வந்திருக்கிறார். அங்கிருந்து ஒரு பேப்பரில் போட்டிருக்கிறான். அவன் என்ன போட்டான் என்றால், இந்தியாவிலிருந்து ஒரு டாக்டர் வந்து டயபெடீசை complete cure பண்ணி விட்டான் என்று போட்டான். (சிரிப்பு.) நான் முதலில் சொன்னது ஒன்றும் போடக்கிடையாது. எனக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னது ஒன்றும் போடவில்லை. டாக்டர் வந்து நல்லா செய்துவிட்டார் என்று சொல்லிப் போடவும், அந்த மறுநாளிலிருந்து ஒரு வாரத்தில் ஒரு முன்னூறு பேர் வந்து மருந்து கொடு என்று கேட்டார்கள். நான், ஒரு பாரம் இருக்கிறது அந்த

பாரத்தைக் கொடுத்து எல்லோரையும் எழுதச் சொன்னேன். அதில் சாப்பாடு முதலிய எல்லாம் எழுதுவான். அவன் என்ன வேலை செய்கிறான். இது எதனால் வந்தது எல்லாம் பார்த்து அதிலே நம்மிடமிருக்கிற மருந்து 45 வயதுக்கு மேலே 60 வயதுக்குள்ளே Diabetes வந்திருக்க வேணும். அது 5 வருஷங்களுக்கு மேல் போகாமல் இருந்திருக்க வேண்டும். வேறு ஒன்றும் affect ஆகாமல் இருக்க வேணும். அந்த மாதிரி கேசு 100 பேருக்கு கொடுத்தால் 100 பேருக்கு நல்லாகிறது. பாக்கி மற்றவர்களுக்கு நல்லாகிறதில்லை. அந்த மாதிரியுள்ள கேஸ் மாத்திரம் பொருக்கி எடுத்ததில் இந்த 300 பேரில் 27 மாத்திரம் அந்த மாதிரி இருந்தது. அந்த 27-ம் எடுத்துக் கொண்டேன். பாக்கி எல்லோரையும் "டாக்டர் ராமசாமி அய்யர் பக்கத்து ரூமில் இருக்கிறார். அங்கே போங்கள்" என்று அனுப்பி விட்டேன். (பலத்த சிரிப்பு.) அங்கே போய் அவர் பார்த்து "உனக்கு இந்த வியாதி இருக்கிறது உன் டாக்டரிடம் போய் இந்த மருந்து வாங்கி சாப்பிடு" என்று சொல்லி அனுப்பி விடுவது. அடுத்த நாளிலிருந்து என்ன ஆயிற்றென்றால் இவர் ரொம்ப சீரியஸ் கேஸ்தான் எடுத்துக் கொள்ளுகிறார். பாக்கியெல்லாம் அடுத்த டாக்டருக்கு அனுப்பி விடுகிறார் (பலத்த சிரிப்பு) என்று சொன்னார்கள். அடுத்த நாளிலிருந்து, அந்த Hospital யே incurable diseases இருக்குமே, அதெல்லாம் நடக்க முடியாதது, பேச முடியாதது, அந்த மாதிரியுள்ளதெல்லாம் புஷ் கார்ட்டு, புஷ் சைக்கிள், ஆம்புலன்ஸில் போட்டு தினம் மூன்று பேர் நான்கு பேர் வர ஆரம்பித்தார்கள். அதற்கு என்ன பண்ணினேன் என்றால், இதற்கெல்லாம் மருந்து இந்தியாவில் இருக்கிறது (சிரிப்பு) அங்கே வாங்கோ உங்களுக்கு.

கொடுக்கிறேனென்று சொல்லி விட்டேன். (பலத்த சிரிப்பு.) அனுதினமும் அதிகமாகிறது.

இதற்கு நடுவில் இனியொரு வேலை செய்து போட்டேன். இங்கிருந்து கல்வம் கொண்டு போய், இந்த ஊரிலிருந்து அவரைச் செடி சாறு இருக்கிறதே அதை ஒரு பாட்டலில் கொண்டு வரச்சொல்லி தங்கத்தை வாங்கி அதில் அரைத்து அதிலே புடம் போட்டு அந்த Ash, Gold into ash. அதை தங்க பஸ்பம் பண்ணி, நீங்க செய்கிற மருந்தில் தங்கம் தங்கம் சேர்க்கிற மருந்திலே அதை evaporate பண்ணி தங்கம் எடுத்துப் போடலாம். ஆனால் இதில் தங்கம் எடுங்கோ பார்க்கலாம் என்று கொடுத்தேன். தங்கம் எடுக்க முடியவில்லை. தங்கத்தினுடைய quality இருக்கிறது, ஆனால் தங்கம் எடுக்க முடியவில்லை என்று கொடுத்து விட்டார்கள். அது ஒரு சர்டிபிகேட் இருக்கிறது. அந்த சர்டிபிகேட்டு, இது, இதுகளெல்லாம் காட்டினால் அப்படியே எல்லாம் பிரமித்து போய் விட்டார்கள். இதையெல்லாம் காட்டி இங்கு மருந்து இல்லை ஊருக்கு வாருங்கள் ஊருக்குப் போய் நான் கொடுக்கிறேன். சொன்ன பிறகு தினமும் ஜாஸ்தியாக வந்து கொண்டே இருந்தது. அதற்கப்புறம் ஒரு speech ல் சொன்னேன், "உங்கள் ஊரில் இருக்கிற வியாதியெல்லாம் எங்கள் ஊரில் இல்லை எங்கள் ஊரில் சாப்பாடு இல்லாததினால் சில வியாதிகள் வருகிறதே தவிற (சிரிப்பு) இந்த மாதிரி வியாதி கிடையாது". அது எப்படி, எதனால் இந்த மாதிரி வியாதி கிடையாது என்று கேட்டார்கள். நம்ம இந்தியன் philosophy அந்த மாதிரி, இந்தியாவி லிருக்கிறவர்க ளெல்லாம் அந்த philosophy படித்தார்கள், படித்திருந்தாலும் படிக்காதிருந்தாலும், அதை follow பண்ணித்தான்

குடியிருப்பான். அந்த பழக்க வழக்கங்களினுல் இந்த வியாதிகளே வராது என்று சொன்னேன். அதைப் போட்டு விட்டான் அந்தப் பேப்பரிலே. அந்த பாகம் போட்டுவிட்டான். இதைப் பார்த்து ஆஸ்திரியாவில் ஒருத்தன் அந்தப் பேப்பரில் போட்டான். அங்கிருந்து ஒருத்தன் லெட்டர் எழுதுகிறுன். "அது எப்படி இருக்கிறது, இந்த மாதிரி lecture கொடுத்தாயே அது எப்படி இருக்கிறது? அதை நாங்கள் film எடுத்துக் கொள்கிறேம். அந்த film எடுப்பதற்கு நீ என்ன கேட்கிருய்? எல்லா சிலவும் கொடுக்கிறேம், ஒரு நாளேக்கு என்ன கேட்கிருய் என்று கேட்டான் — இங்கே இந்த தொந்தரவு பொறுக்க முடியாதபடிக்கு அந்த லெட்டரை எடுத்துக் கொண்டு அவர்களிடமே போய் விட்டேன். (சிரிப்பு.) அவர்களிடம் ஒரு நாலேந்து பேரை கூட்டிக் கொண்டு போய் (பசங்களே கூட்டிப் போய்,) நீ சும்மா எடுத்துக்கொள் எனக்கு ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லே. இந்தப் பசங்களேக் கொண்டுபோய் இன்னின்ன பேக்டரிகளில் சேர்க்க வேண்டும் என்று சொல்லி வா என்று கூப்பிட்டு, அவனேக் கூட்டிக் கொண்டு போய் 6 மாதத்திற்கு சிலவில்லாத படிக்கு படிக்கிறதற்கு வைத்து விட்டு நானும் அவனிடம் guest ஆக இருந்து விட்டு ஒரு மாதத்திற் கப்புறம் இதைக் காட்ட வேண்டு மென்றுல் என் சம்சாரம், பசங்கள் எல்லாம் இருக்க வேண்டும், அந்த மாதிரி வீடு வேண்டும். இங்கு எப்படி இருக்கிறது இங்கு எந்த மாதிரி இருக்கிறது. நீ இந்தியாவுக்கு வந்து எடுத்துக்கோ. அப்படி என்று சொன்னேன். சரி ஆகட்டும் என்று சொன்னுன். எப்பொழுது போகிருய் என்று கேட்டான். எப்பப் போகிறேன் என்று சொன்னுல், இதற்கு முன்பே இருந்த அந்த டாக்டர்கள் என்ன பண்ணி

ளுர்கள் என்ருல், அந்த speech-லே cancer-ருக்கு எங்கள் ஊரில் மருந்து இருக்கிறது என்று சொல்லி யிருக்கிறேன். நீங்கள் cancer-ருக்கு மருந்து இல்லாத இடத்திலே லாட், லாட்டாக செலவழிக்கி றீர்கள், அமெரிக்காவிலும், இங்கேயும். எங்கள் ஊரில் மருந்து இருக்கிறது. அங்கே யாரும் செலவு பண்ணவில்லை என்று சொன்னேன். அதற்கும் செலவு பண்ணுகிறேன் என்று வந்து விட்டார்கள். என்னிடம் வந்து கேன்சருக்கு படிக்கிறேன் என்று வருகிருர்கள். தயார் பண்ணி விட்டார்கள். லெட்டர் எழுதுகிருர்கள். இப்போ ஒரு டாக்டர் வந்திருந்தார் இங்கே. நம்ம மருந்து செய்கிற இடத்திற்கு வந்தார். அவர் வருகிருர் என்று தெரிந்ததும் அன்றைக்குப் பூட்டுப் போட்டவன், அவர் போனபிறகுதான் திறந்தேன். (சிரிப்பு.) ஏனென்ருல் இதைப் பார்த்தால் யாரும் வாயில் வைக்க மாட்டார்கள். தூசியும் குப்பையுமாக இருக் கிறது. கையில் தொட்டுச் செய்கிருன். அங்கே அந்த மாதிரி செய்தால் எடுக்க மாட்டார்கள். அந்த இடத்திற்கு என்னிடத்தில் படிக்கிறேன் என்று வந் தால் எனக்கு கேன்சர் என்ருலே என்னவென்று தெரியாது. என்னிடத்தில் வருவதற்கு இரண்டு பேர் இருக்கிருர்கள். அப்புறம் இந்த முத்துலட்சுமி ரெட்டிக்கு லெட்டர் எழுதினேம். இந்த மாதிரி இரண்டு பேர் Experts வருகிருர்கள் நீங்கள் வைத்து வேலை வாங்குங்கள் என்று. அப்படியானல் ஆகட்டுமென்ருர் அந்தம்மாள். சரி என்று வரச் சொன்னேன். வருகிறதற்கு முன்பு இன்னின்ன சாமான்கள் வேண்டுமென்று நான் அந்த லெட்டரை அந்த அம்மாளுக்கு அனுப்பினேன். இங்கு எல்லாமிருக்கிறது microscope மாத்திரமில்லை யென்ருர்கள். அது எவ்வளவு விலை ஆகுமென்றேன்

ரூ 25,000 ஆகுமென்றார்கள். ரூ. 25,000 கொடுத்து விட்டேன். கொடுத்தபின்னால் அந்த அம்மாள் ஆர்டர் கொடுத்தால், இது 10 வருஷங் களுக்கு முந்தின microscope இப்பொழுது லக்ஷத்து ஐம்பதினாயிரம் முதல் மூன்று லக்ஷம் வரையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு அந்த அம்மாளிடம் பணம் இல்லை. யார் யாருக்கோ எழுதிப் பார்த்தார்கள். நேரு 12,000 கொடுத்தார், வேறு யாரோ 25,000 கொடுத்திருக்கிறார். ஆனால் இன்னும் லக்ஷத்து ஐம்பதினாயிரம் ஆகவில்லை. ஆக எனக்கு லெட்டர் எழுதினார்கள். நான், இவர்கள் வந்து விட்டால் மோசம் என்று க்ருதி "நான் இன்னும் ஒன்றரை வருஷம் ஜெர்மெனியில் இருக்கப் போகிறேன், நான் போகிறபோது சொல் கிறேன்" என்று சொல்லி நிறுத்தி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். அதற்கு நடுவில் கருவேலம் பொடி கேட்கிறான். கருவேலம் பொடி, இந்த விதை இதெல்லாம் அமெரிக்காவில் இருந்து கேட்கி றார். அவன் இங்கே கோயமுத்தூருக்கு வந்து நான் இல்லாதபோது இந்த லேபரேட்டரி எல்லாம் பார்த்து விட்டு, மூலிகைகள் எல்லாம் வைத்திருக்கிற தோட்டம் எல்லாம் பார்த்து விட்டுப் போயிருக்கிறான், போன பிறகும் கேட்கிறான், இதெல்லாம் இப்படியெல்லாம் அடித்து ஏதேதோ செய்து ஒவ்வொரு தடவையும் ஒரு லக்ஷ ரூபாய், ஒன்றரை லக்ஷ ரூபாய் அடித்துக் கொண்டு வருகிறேன்.

அதாவது அங்கே மருந்து கொடுத்து நன்றாக ஆனால் பணம் கொடுக்க முன்வருவான். அவனிடம் பணம் வாங்குகிறதில்லை நாயுடு சும்மாதான் கொடுக்கிறது என்று நன்றாக ஜோராகச் சொல்லி

விடுகிறது. ஆனால் அவனே எதற்கு வேண்டுமென்றாலும் உபயோகிக்கிறது. ஒரு எக்சிபிஷன் நடந்தது, அந்த எக்சிபிஷனில் போய் "நானும், என்னுடைய க்ளார்க் ஒருத்தன், ப்யூன் ஒருத்தன், குக் ஒருத்தன் இத்தனை பேரும் எக்சிபிஷனுக்கு வருகிறோம், நீ ஹெல்ப் பண்ண வேண்டும்" என்று எழுதினால், அவன் 300 மைலுக்கு அப்புறம் வந்து காத்துக் கொண்டு எல்லாம் தயார் பண்ணி வைத்து விட்டு, காலையில் 9 மணிக்கு காரில் வந்து கூட்டிக் கொண்டு போய் இரவு 11 மணிக்குக் கொண்டு வந்து விடுவான். பணம் கொடுத் திருந்தால் பத்தோ, நூறோதான் கொடுத்திருப்பான். இது எவ்வளவு வேண்டுமானாலும் செலவு ஆகிறது அது அவன் போட்டுக் கொள்கிறான். அதே மாதிரி ஒருவனுக்கு வாட்சு வாங்கினேன். அவன் காரிலேயே போய் வாங்கினேன். 4 வாட்ச்சு எடுத்து விட்டு 2 வாட்ச்சுக்குப் பணம் கொடுத்து விட்டு 2 வாட்ச்சை வேண்டாம் என்று திருப்பிக் கொடுத்து விட்டேன். பக்கத்தில் சொல்லுகிறான் "நீ அதையும் எடுத்துக் கொள் நான் பணம் கொடுத்து விடுகிறேன்" என்றான். "இந்த 2 போதாது, நிறைய பேர்கள் இருக்கிறார்கள் வேண்டாம்" என்றேன். "எத்தனை பேர் இருந்தாலும் அட்ரஸ் கொடு" என்றான் சரி என்று அட்ரஸ் அடித்தேன். (சிரிப்பு.) நம்ம பசங்கள் அட்ரஸ்தானே தெரியும். நம்ம ஸ்வீப்பர் முதல் மேனேஜர் வரை 430 அட்ரஸ் அடித்தேன், நான் வருவதற்குள் 430 பேருக்கும் வாட்ச் வந்தாச்சு. அதில் இல்லாத பேரு, இருக்கிற பேரு – இல்லாத பேரு 10, 20 பேர்தான் – அதற்கும் வாட்ச் வந்தாச்சு. (சிரிப்பு.) அவ்வளவு வாட்சும் வந்தாச்சு. அதே மாதிரி அங்கேயும் ஏதேதோ சாமான்கள் எல்லாம் அடித்துக் கொண்டு வந்தேன். ஒவ்வொரு

தடவையும் அடித்துக் கொண்டு வருகிறேன். ஆனால் இங்கே வந்தால் 90 ஆயிரம், 50 ஆயிரம் பினல்டி போட்டு விடுகிறார்கள். ஆகையால் இந்த இரண்டு டிரிப்பிலும் ஒன்றும் கொண்டு வரவில்லை.

கேன்சர் டாக்டர்கள் இருக்கிறார்களே அந்த இரண்டு பேரில் ஒருவன் International Symposium of Chemotherapy-க்கு சேர்ந்தவன் அதற்கு உலகத்தில் உள்ள டாக்டர்கள் எல்லாம் வருகிறார்கள். வந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு நோய்க்கும், இரண்டு பேர், நான்கு பேர் discuss பண்ணி, இது வரைக்கும் என்ன மருந்து இருக்கிறது, இனிமேல் என்ன செய்யலாம் என்று discuss பண்ணுகிறது. அதில் எனக்கு cancer பற்றி discuss பண்ண invitation வருகிறது. cancer என்றால் எனக்கு ஒன்றும் தெரியாது. அதனால் cancer ஐ பற்றி சித்தவைத்தியத்தில் உள்ளதை யெல்லாம் எடுத்து எழுதிவருகிறேன் என்று சொல்லிப்போய், அங்கேயும் போய் ஏதேதோ உருட்டி விட்டு வந்திருக்கிறேன்.

இதெல்லாம் ஜெர்மெனியில் உபயோகிக்கிற letter head. இங்கே உள் நாட்டில் சும்மா G. D. Naidu, Gopal Bagh, Coimbatore என்று போட்ட letter head-ஐ தான் உபயோகிக்கிறது. இதில் டாக்டர் G. D. Naidu, M. I. S. E., M. A. S., M. E., M. S. A. E. (சிரிப்பு) இன்னொரு letter head இருக்கிறது, அதில் 23 டிகிரி இருக்கிறது, அந்த 23-ம் போட்ட லெட்டர் மாத்திரம் அமெரிக்காவுக்குப் போகிறது, இது ஜெர்மெனிக்கு மாத்திரம்.

இதே மாதிரி பேசிக் கொண்டே போனால் ரொம்ப நேரம் ஆகிவிடும் (மெம்பர்கள் பதில் பரவாயில்லை.) — ரோட்டரி என்று இல்லாத படிக்கு வேறு ஏதாவது சும்மா மீட்டிங் என்று வைத்துக் கொண்டு, அன்றைக்கு வந்து எவ்வளவு நேரம் வேண்டுமானால், ராத்திரி 2 மணி மூன்று மணி வரையிலும் வேண்டுமானாலும் பேசலாம். ரோட்டரியில் வைத்து இந்த மாதிரி பேசுவதை நான் விரும்பவில்லை. நீங்கள் சரி என்றால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நான் பேசுவதற்குத் தயார்தான். (சிரிப்பு.) இன்னொரு நாளைக்கு இந்த மாதிரியே பேசுகிறதென்று ஒரு ஏற்பாடு செய்து கொண்டு சொல்லுங்கள் அப்பொழுது வருகிறேன். வந்ததும் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் பேசுகிறேன். எனக்குத் தெரிந்தது அது ஒன்றுதான். ஆட்டோ மொபைல் ஒன்றுதான் சரியாகத் தெரியும் என்று சொல்லலாமே ஒழிய, மற்றது ஒன்றும் தெரியாது. வந்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்தி யிருக்கிறேன். அதை விடாதபடிக்கு அதை எப்படி எப்படி use பண்ணலாமோ, அப்படி அப்படி எல்லாம் use பண்ணியிருக்கிறேன்.

இனிமேல் நான் பேச வேண்டுமென்றால் இன்னொரு நாள் வருகிறேன். இப்பொழுது இவ்வளவு நேரம் இருந்ததற்கே என்ன சொல்வதென்று தெரியவில்லை. (சிரிப்பு.) இவ்வளவு நேரமும் உட்காரவைத்து விட்டேன். யாராவது, எங்கேயாவது ஸ்கூல்களில் போய்ச் சொன்னால் அது வேறு மாதிரியாக இருக்கும். இப்பொழுது அதுதான் சொல்ல வேண்டும் என்று நானும் இவரும் பேசிக் கொண்டிருந்தோம், அதாவது Small Scale Industries ல் எப்படி செய்யலாம். Educational ல் என்ன system

இருக்கலாம் என்று இங்கே சொல்லி வைக்கலாம். இவர்கள் இங்கே அதற்காக வேலை செய்யட்டும் நான் ஒருவன் போய் செய்வதற்கு பதில் இவ்வளவு பேரும் சேர்ந்து அந்த small scale industry எந்தெந்த மாதிரி செய்ய வேண்டும், education ல் என்னென்ன system இருக்க வேண்டும், இங்கே ரொம்ப நல்ல இடங்கள் இருக்கின்றன. நன்றாகப் பையன்கள் வேலைச் செய்கிறார்கள், போய்ப் பார்த்தேன், அதை சரியான வழியில் கொண்டு போனால் ரொம்ப usefulஆக இருக்கும். 100 க்கு 10% தான் இப்பொழுது அதன் பயனை அனுபவிக்கிறோம். செலவு லக்ஷ ரூபாய் ஆயிற்று என்றால் அதில் 10% னுடைய பலன்தான் நமக்கு வந்து கொண்டு இருக்கிறது, அது 100 க்கு 100% ம் கொண்டு வரலாம். அதைப் பற்றிச் சொல்லலாம் என்று தான் நாங்கள் பேசிக் கொண்டு வந்தோம். இங்கே வந்து அதெல்லாம் பூராவாக மாறிப்போய் வேறு எதெற்கோ இழுத்துக் கொண்டு போய் விட்டது.

இதுவரை இவ்வளவு நேரம் செய்ததற்கு மன்னிக்கும்படி எல்லோரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன், எல்லோருக்கும் நமஸ்காரம். (கரகோஷம்.)

Vote of thanks by

Rtn. A. L. Missier,

Secretary, Rotary Club, Tirunelveli.

President, Distinguished speaker of this evening, Fellow Rotarians and Friends,

At the outset I would like to thank the distinguished speaker of this evening. In spite of his various engagements outside, infact he has cancelled his engagements at Coimbatore to-day when we requested him and myself and rotarian past president Dr. Vasudeva Menon went to him, he was very glad to accept the invitation inspite of the other things there. I thank you Sir, for having accepted and addressed us and on behalf of the rotary club, I feel it a pleasure and a privilege to have heard you and your methods.

I thank all the guests who have responded to our invitation and in fact my thanks are due to Rotarian Bala Singh for the nice tea also. (Cheers.)

Printed at

U. M. S. POWER PRESS,
COIMBATORE.